20 ஜூன், 2015

## ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது

இனிமையான குழந்தைகளே, இப்போது இது உங்களுடைய தெய்வீக குடும்பம். தந்தை கூறுகிறார்: உங்களை ஓர் ஆத்மா என கருதி தந்தையை நினைவு செய்யும்போது, நீங்கள் தெய்வீக குடும்பத்தை சார்ந்தவர்கள். நீங்கள் உடல் உணர்வுடையவராக ஆகி தந்தையை மறந்து விடும்போது, நீங்கள் அசுர குடும்பத்தைச் சார்ந்தவர்கள். ஒரு நிமிடத்தில், நீங்கள் தெய்வீக சமூகத்தைச் சார்ந்த பின்னர் ஒரு நிமிடத்தில், நீங்கள் அசுர சமூகத்தை சார்ந்தவர்கள் ஆகிவிடுகின்றீர்கள். நீங்கள் அனைத்தையும் செய்யும் போது தந்தையின் நினைவில் இருக்க முயற்சி செய்ய வேண்டும்.

இனிமையான பாபா, நாள் பொழுதில் நான் உங்களுக்கு சொந்தம் என்ற என்னுடைய விழிப்புணர்வை என்னுள் ஆழமாக்குவேன். மற்றும் நீங்கள் எனக்கு சொந்தம். நான் ஓர் ஆத்மா என்றும் நான் தெய்வீக குடும்பத்தைச் சார்ந்தவன் என்று என்னுடைய விழிப்புணர்வில் பதிவு செய்வேன். நான் நாள் பொழுதில் நான் செய்கின்ற அனைத்திலும் உங்களை நினைவு செய்துகொண்டே இருப்பேன்.

## சமார்த்தி அல்லது சக்தி

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

## மனோ-விருத்தி அல்லது மனோபாவம்

பாபா ஆத்மாவிற்கு: இராஜரீகம் இருக்க வேண்டும். உங்கள் மரபுகள் மற்றும் அமைப்புகள் உலகத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருக்க வேண்டும். இராஜரீகமான மக்கள் தாங்களாகவே ஒன்று அல்லது மற்றொன்றை கொடுப்பார்கள். சிலர் இந்த ஞானத்தைப் படித்து உங்களுக்கு பணத்தை அனுப்புவார்கள். நீங்கள் தான் செலவை ஏற்றுக் கொண்டவர்கள். அவர்களை நோக்கி: நாம் பாரதத்திற்கு சேவை செய்ய எங்கள் உடல், மனம் மற்றும் செல்வத்தை பயன்படுத்துகின்றோம் என்று கூறுகின்றீர்கள்.

நான் இன்று இராஜரீகமாக மனோபாவத்தை பின்பற்றுவேன். இராஜரீகம் எதையும் கேட்பதில்லை என நினைவு செய்கின்றேன். இந்த இராஜரீகமான மனோபாவம் முழுச்சக்கரத்திலும் எனக்கு உதவும். நான் கேட்பதை துறக்கும் போது என் மனோபாவம் அரசனாகவும் என்னுடைய செயல்கள் உயர்ந்ததாகவும் ஆகின்றன.

## திருஷ்டி அல்லது தூயா பார்வை

பாபா ஆத்மாவிற்கு: உங்களுக்கு அனைத்து மனிதர்களும் இந்த உலக சக்கரத்தில் வருவார்கள் எனவும் ஒருவரும் அதிலிருந்து விடுவிக்கப்பட முடியாது என்று தெரிகின்றது. தந்தை விளக்குகிறார்: ஒரு மனித ஆத்மா ஓர் உடலை விட்டு

மற்றென்று எடுக்கும். நாடகம் மிகவும் பெரியது. அனைவருக்குள்ளும் ஓர் ஆத்மா இருக்கின்றது. அந்த ஆத்மாவில் அழியாத பாகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இன்று என் திருஷ்டியில் முழு உலக நாடகத்தை வைத்திருக்கிறேன். ஆத்மாக்களை பார்த்து நான் அவர்களுக்குள் உள்ள அழிவற்ற பாகத்தை கவனமாக பார்த்துக்கொள்கிறேன்.

**ஓர் அலையை உருவாக்குதல்**

*நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஓர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.*